# 102/2025-T

| Question Booklet Alpha Code | A | Question Booklet Serial Number |
|---|---|---|

| Total Number of Questions : 100 | Time : 1 Hour 30 Minutes |
|---|---|
| Maximum Marks : 100 | |

A

## INSTRUCTIONS TO CANDIDATES

1. The question paper will be given in the form of a Question Booklet. There will be four versions of question booklets with question booklet Alpha Code viz. A, B, C & D.
2. The Question Booklet Alpha Code will be printed on the top left margin of the facing sheet of the question booklet.
3. The Question Booklet Alpha Code allotted to you will be noted in your seating position in the Examination Hall.
4. If you get a question booklet where the Alpha Code does not match to the allotted Alpha Code in the seating position, please draw the attention of the Invigilator IMMEDIATELY.
5. The Question Booklet Serial Number is printed on the top right margin of the facing sheet. If your question booklet is unnumbered, please get it replaced by new question booklet with same Alpha Code.
6. The question booklet will be sealed at the middle of the right margin. Candidate should not open the question booklet until the indication is given to start answering.
7. Immediately after the commencement of the examination, the candidate should check that the question booklet supplied to him/her contains all the 100 questions in serial order. The question booklet does not have unprinted or torn or missing pages and if so, he/she should bring it to the notice of the Invigilator and get it replaced by a complete booklet with same Alpha Code. This is most important.
8. A blank sheet of paper is attached to the question booklet. This may be used for rough work.
9. **Please read carefully all the instructions on the reverse of the Answer Sheet before marking your answers.**
10. Each question is provided with four choices (A), (B), (C) and (D) having one correct answer. Choose the correct answer and darken the bubble corresponding to the question number using Blue or Black Ball Point Pen in the OMR Answer Sheet.
11. **Each correct answer carries 1 mark and for each wrong answer 1/3 mark will be deducted. No negative mark for unattended questions.**
12. No candidate will be allowed to leave the examination hall till the end of the session and without handing over his/her Answer Sheet to the Invigilator. Candidates should ensure that the Invigilator has verified all the entries in the Register Number Coding Sheet and that the Invigilator has affixed his/her signature in the space provided.
13. Strict compliance of instructions is essential. Any malpractice or attempt to commit any kind of malpractice in the Examination will result in the disqualification of the candidate.

DO NOT WRITE HERE

1. எந்த நாடு அதன் ஸ்தாபகத் தலைவரை அதிபர் பதவியில் இருந்து நீக்கியது?
   (A) எகிப்து
   (B) பங்களாதேஷ்
   (C) மியான்மர்
   (D) ஸ்ரீலங்கா

2. "சினாம்பாஸ்" எனப்படும் செயற்கைத் தீவுகள் எந்தக் கலாச்சாரத்துடன் தொடர்புடையவை?
   (A) சீன கலாச்சாரம்
   (B) மாயன் கலாச்சாரம்
   (C) ஆஸ்டெக் கலாச்சாரம்
   (D) இன்கா கலாச்சாரம்

3. பின்வரும் கூற்றுகளில் எது போர்த்துகீசியர்களுடன் தொடர்பில்லாதது?
   (A) 1663 இல் கொச்சி கைப்பற்றப்பட்டது
   (B) கலப்பு காலனி அமைப்பு நிறுவப்பட்டது
   (C) கார்டீசியன் அமைப்பு நிறுவப்பட்டது
   (D) பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவா கைப்பற்றப்பட்டது

4. கீழேயுள்ள பட்டியலைச் சரிபார்த்து, வகை B யிலிருந்து வகை A க்கு பொருத்தமானவற்றைக் கண்டறிந்து சரியான பதிலைக் கண்டறிக.

| A | B |
|---|---|
| a. ஜே. எம். சட்டர்ஜி | i. அபினவ் பாரத் |
| b. பரிந்திரநாத் கோஷ் | ii. ஹிந்துஸ்தான் குடியரசு சங்கம் |
| c. சந்திரசேகர் ஆசாத் | iii. பாரத் மாதா சங்கம் |
| d. வி. டி. சாவர்க்கர் | iv. அனுஷிலன் சமிதி |

   (A) a – iv, b – i, c – iii, d – ii
   (B) a – i, b – iv, c – ii, d – iii
   (C) a – ii, b – iii, c – i, d – iv
   (D) a – iii, b – iv, c – ii, d – i

5. ஆராவில் 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கு தலைமை தாங்கிய தலைவர் யார்?
   (A) நானா சாகிப்
   (B) பக்த் கான்
   (C) குன்வர் சிங்
   (D) பகதூர் கான்

6. பின்வரும் நிகழ்வுகளை காலவரிசைப்படி வரிசைப்படுத்தவும்:

a. குறிச்சியர் எழுச்சி

b. சன்யாசி எழுச்சி

c. சந்தால் எழுச்சி

d. பழசி எழுச்சி

(A) b, d, a, c

(B) c, d, a, b

(C) b, c, d, a

(D) a, c, b, d

7. பின்வருவனவற்றில் ஆறுகளின் மேல் பகுதிகள் தொடர்பான சரியான கூற்று எது?

(A) மேல் பகுதிகளில், பல சிற்றோடைகள் ஒன்றிணைந்து ஓடைகளாக உருவாகின்றன.

(B) ஆற்றின் மேல் பகுதிகளில் டெல்டாக்கள் உருவாகின்றன.

(C) ஆற்றின் மேல் பகுதிகளில், மலைப்பகுதிகளில் Oxbow Lakes காணப்படுகின்றன.

(D) ஆறுகளின் மேல் பகுதிகளில் நுண் மணல் அடுக்குகள் செறிவாக நிறைந்துள்ளன.

8. சிந்து நதியின் கிழக்குப்புற துணை நதிகள் எவை?

(A) ரவி, பியாஸ், சட்லஜ்

(B) சிந்து, ஜீலம், செனாப்

(C) ஜீலம், பியாஸ், ரவி

(D) செனாப், பியாஸ், சிந்து

9. வளிமண்டலத்தின் அடுக்கான அடிவளிமண்டலத்தில் (troposphere) காணப்படும் வெப்ப இழப்பு விகிதம் தொடர்பான சரியான அறிக்கை எது?

(A) ஒவ்வொரு 175 மீட்டர் உயரத்திற்கும் 1°C என்ற விகிதத்தில் வெப்பநிலை குறைகிறது.

(B) ஒவ்வொரு 165 மீட்டர் உயரத்திற்கும் 1°C என்ற விகிதத்தில் வெப்பநிலை குறைகிறது.

(C) ஒவ்வொரு 175 மீட்டர் உயரத்திற்கும் 1°C என்ற விகிதத்தில் வெப்பநிலை அதிகரிக்கிறது.

(D) ஒவ்வொரு 165 மீட்டர் உயரத்திற்கும் 1°C என்ற விகிதத்தில் வெப்பநிலை அதிகரிக்கிறது.

10. பசுமையான காடுகள் பெரும்பாலும் காணப்படும் காலநிலை பகுதி எது?

(A) பூமத்திய ரேகை காலநிலை பகுதி

(B) மத்திய (Mediterranean) தரைக்கடல் காலநிலை பகுதி

(C) வெப்பப் புல்வெளி (Savanna) காலநிலை பகுதி

(D) துருவப்பகுதி (Tundra) காலநிலை பகுதி

11. துவாந்தர் நீர்வீழ்ச்சி எந்த ஆற்றில் காணப்படுகிறது?

(A) தப்தி

(B) நர்மதா

(C) சோன்

(D) பெட்வா

12. டிரிபனோசோமியாசிஸ் ஒட்டுண்ணி நோயை உண்டாக்கும் உயிரினம் எது?

(A) பாக்ட்ரோசெரா குக்குர்பிடே

(B) ட்ரோசோபிலா மெலனோகாஸ்டர்

(C) மஸ்கா டொமஸ்டிகா

(D) செட்சே வகை ஈ

13. சர்வதேச சந்தையில் அதிக தேவையுள்ள முக்கிய பயிரான 'அரேபிகா' எதனுடன் தொடர்புடையது?

(A) தேயிலை

(B) காபி

(C) மக்காச்சோளம்

(D) கரும்பு

14. மரபுசாரா ஆற்றல் மூலங்கள் எது இடம்பெறவில்லை?

(A) சூரிய ஆற்றல்

(B) அலை ஆற்றல்

(C) பெட்ரோலியம்

(D) காற்று ஆற்றல்

15. உலகப் பொருளாதார மன்றத்தின் நிரந்தர அமைவிடம் எது?

(A) டாவோஸ்

(B) லண்டன்

(C) டெல்லி

(D) பாரிஸ்

16. பேமெண்ட் வங்கிகளின் அம்சங்கள் யாவை?

i. தனிநபர்களிடமிருந்து ரூ 1 லட்சம் வரை வைப்புத் தொகைகளை ஏற்றுக்கொள்கிறது

ii. அவைகள் கடன்களை வழங்குகின்றன

iii. டெபிட் கார்டுகளை வழங்குவதில்லை

iv. இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதங்கள் வைப்புத் தொகைகளுக்கு வழங்கப்படுகின்றன

(A) i மற்றும் iii சரியானவை

(B) ii மற்றும் iv சரியானவை

(C) ii மற்றும் iii சரியானவை

(D) i மற்றும் iv சரியானவை

17. எந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின்போது இந்தியா உலக வர்த்தக அமைப்பில் உறுப்பினரானது?

(A) ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்

(B) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

(C) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்

(D) பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

18. இந்திய ரிசர்வ் வங்கிக்கு உள்ளேயும் வெளியேயும் காகிதப் பயன்பாட்டைக் குறைப்பதற்கான டிஜிட்டல் திட்டங்கள் யாவை?

(A) உத்கம், உத்கல்

(B) சஞ்சயா, சாங்க்யா

(C) சாரதி, பிரவாஹ்

(D) சுலேகா, சேவனா

19. சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் தாங்கள் திரும்பும் பயணத்திற்காக பயன்படுத்திய விண்கலத்தின் பெயர் என்ன?

(A) ஸ்டார்லைனர்

(B) டிஸ்கவரி

(C) கொலம்பியா

(D) டிராகன்

20. அரசியலமைப்புச் சபையில் 17 மலையாளி உறுப்பினர்கள் இருந்தனர். பின்வருவனவற்றில் திருவிதாங்கூர் மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர் யார்?

(A) கே. ஏ. முகமது

(B) பனம்பள்ளி கோவிந்த மேனன்

(C) ஏ. கே. மேனன்

(D) கே. மாதவ மேனன்

21. இந்திய அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ள சமூக நீதி, பொருளாதார நீதி மற்றும் அரசியல் நீதி ஆகிய மூன்று வகையான நீதிகளும் எங்கிருந்து பெறப்பட்டன?

(A) பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து

(B) ரஷ்யப் புரட்சியிலிருந்து

(C) அமெரிக்க அரசியலமைப்பிலிருந்து

(D) தென் ஆப்பிரிக்காவிலிருந்து

22. இந்தியாவிற்கு வெளியே தொடர்ந்து எத்தனை ஆண்டுகள் வசித்ததற்காக, ஒரு நபரின் குடியுரிமையை மத்திய அரசு ரத்து செய்ய முடியும்?

(A) 7 ஆண்டுகள்

(B) 5 ஆண்டுகள்

(C) 10 ஆண்டுகள்

(D) 12 ஆண்டுகள்

23. எந்தத்திருத்தத்தின்மூலம்அடிப்படைக்கடமைகள்அரசியலமைப்பில்சேர்க்கப்பட்டன?

(A) 73-வது திருத்தம்

(B) 44-வது திருத்தம்

(C) 42-வது திருத்தம்

(D) 52-வது திருத்தம்

24. பின்வருவனவற்றில் எது மத்திய அரசு (ஒன்றிய) பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது?

(A) மீன்வளம்

(B) விவசாய வருமான வரி

(C) விலைக் கட்டுப்பாடு

(D) லாட்டரி

25. சொந்தமாக செயற்கைக்கோளை ஏவிய இந்தியாவின் முதல் மாநிலம் எது?
   (A) அசாம்
   (B) மகாராஷ்டிரா
   (C) குஜராத்
   (D) கர்நாடகா

26. வரிசைப்படி எழுதவும்:

| | |
|---|---|
| i) எனது ஆரோக்கியம் எனது உரிமை | a) யோகா தினம் |
| ii) நமது உரிமைகளே நமது எதிர்காலம் | b) புவி நாள் கருப்பொருள் 2025 |
| iii) நமது ஆற்றலே நமது பூமி | c) உலக சுகாதார நாள் |
| iv) தனக்காகவும் சமூகத்திற்காகவும் யோகா | d) மனித உரிமைகள் நாள் |

   (A) i – c, ii – d, iii – b, iv – a
   (B) i – d, ii – b, iii – a, iv – c
   (C) i – c, ii – a, iii – b, iv – d
   (D) i – b, ii – c, iii – d, iv – a

27. பள்ளி மாணவர்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுக்க கலால் துறையின் கீழ் விமுக்தி தலைமையில் பள்ளிகளில் எந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது?
   (A) நேர்வழி
   (B) உணர்வு
   (C) கர்மாச்சாரி திட்டம்
   (D) பீட்ஸ் திட்டம்

28. லோக் அதாலத் என்ற சொற்றொடர் எந்த வகை நீதிமன்றத்தைச் சேர்ந்தது?
   (A) மக்கள் நீதிமன்றம்
   (B) முன்சீப் (மாவட்ட) நீதிமன்றம்
   (C) மாஜிஸ்திரேட் (குற்றவியல் நடுவர்) நீதிமன்றம்
   (D) இவைகளில் எதுவும் இல்லை

29. கிராமப்புறங்களில் அந்த்யோதயா மற்றும் அன்ன யோஜனா ரேஷன் கார்டுகளுக்கு (குடும்ப அட்டை) இறுதி ஒப்புதல் அளிப்பது யார்?
   (A) நகர்ப்புற வளர்ச்சித் துறை
   (B) ஊரக வளர்ச்சித் துறை
   (C) ஊரக மேம்பாடு அமைச்சகம்
   (D) இவைகளில் எதுவும் இல்லை

30. கேரளாவில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை முதன்முதலில் செயல்படுத்திய மாவட்டங்கள் எவை?

(A) வயநாடு மற்றும் இடுக்கி

(B) கொல்லம் மற்றும் கோட்டயம்

(C) பத்தனம்திட்டா மற்றும் திருச்சூர்

(D) பாலக்காடு மற்றும் வயநாடு

31. கேரளா மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் நிறுவப்பட்டபோது முதல்வராக இருந்தவர் யார்?

(A) உம்மன் சாண்டி

(B) வி.எஸ். அச்சுதானந்தன்

(C) பினராயி விஜயன்

(D) ஏ. கே. ஆண்டனி

32. பின்வருபவர்களில் கேரளாவின் தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் யார்?

(A) ஷாஜஹான்

(B) ராஜீவ் குமார்

(C) பிரணாப் ஜோதிநாத்

(D) ஞானேஷ் குமார்

33. வேளாண்மைத் துறையின் கீழ் கேரளாவின் முதல் வேளாண் கண்காட்சி மையம் எங்கு தனது செயல்பாடுகளைத் தொடங்கியது?

(A) ஆனயரா

(B) குட்டநாடு

(C) பாலக்காடு

(D) வயநாடு

34. கேரளாவில் உள்ள மூன்றாம் நிலை சுகாதார நிறுவனங்கள் யாவை?

(A) பொது மருத்துவமனைகள்

(B) தாலுகா மருத்துவமனைகள்

(C) மருத்துவக் கல்லூரிகள்

(D) சமூக சுகாதார மையங்கள்

35. மிகவும் மாறுபட்ட விலங்கினங்கள் எவை?

(A) மீன்கள்

(B) பறவைகள்

(C) பாலூட்டிகள்

(D) பூச்சிகள்

36. பிப்ரவரி 2025 இல் கேரள அரசு தொடங்கிய "ஆரோக்கியம் ஆனந்தம்" திட்டத்தின் நோக்கம் என்ன?

(A) புற்றுநோய் விழிப்புணர்வு

(B) வெறிநாய்க்கடி தடுப்பு

(C) எய்ட்ஸ் விழிப்புணர்வு

(D) கோவிட் தடுப்பு

37. பெல்லாக்ரா (தோல் வறட்சி) எந்த வைட்டமின் குறைபாட்டால் ஏற்படும் நோய்?

(A) வைட்டமின் $B_3$

(B) வைட்டமின் C

(C) வைட்டமின் K

(D) வைட்டமின் $B_{12}$

38. செல்லில் காணப்படும் எந்த செல் கூறு, செல்லுக்குத் தேவையான ஆற்றலை ATP வடிவில் உற்பத்தி செய்து சேமிக்கிறது?

(A) மைட்டோகாண்ட்ரியா

(B) கோல்கி உடல்கள்

(C) லைசோசோம்கள்

(D) ஃபெனோம்கள்

39. நுரையீரல் வீக்கம் (எம்பிசிமா) எனப்படும் கொடிய நோயை எது விளைவிக்கிறது?

(A) தொற்று

(B) வைட்டமின் குறைபாடு

(C) புகைபிடித்தல்

(D) ஹார்மோன் சமநிலையின்மை

40. இரத்த வகை $AB^-$ (AB நெகட்டிவ்) உள்ள ஒருவர் விபத்து காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவருக்கு அவசர இரத்தமாற்றம் தேவைப்பட்டால், அந்த நபருக்கு எந்த இரத்த வகைகளைக் கொடுக்கலாம்?

(A) $A^+$, $B^+$, $AB^+$, $O^+$

(B) $A^-$, $B^-$, $AB^-$, $O^-$

(C) $AB^-$ மட்டும்

(D) $O^-$ மட்டும்

41. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

i) மலேரியாவை ஏற்படுத்தும் காரணியாக இருப்பது வுச்சரேரியா பாங்க்ரோஃப்டி என்ற புழு ஆகும்

ii) மலேரியாவைப் பரப்பும் கொசு அனோபிலிஸ் பேரினத்தைச் சேர்ந்த பெண் கொசு ஆகும்

iii) வளர்ச்சியடைந்த மலேரியா புழு நிணநீர் மண்டலத்தில் (Lymphatic system) வாழ்கிறது.

iv) மரபணுக் குறைபாடுகளே மலேரியாவுக்கு முக்கியக் காரணம்


(A) i மற்றும் ii சரியானவை


(B) i, ii மற்றும் iii சரியானவை


(C) i மற்றும் iii சரியானவை


(D) iv மட்டும் சரியானது

42. நிகர விசை (Net force) பூஜ்ஜியமாக உள்ள வரைபடம் எது

(A)



(B)



(C)



(D)


43. பரவுவதற்கு ஒரு ஊடகம் தேவைப்படும் அலை எது?

(A) ஒளி அலை

(B) ரேடியோ அலை

(C) ஒலி அலை

(D) காமா அலை

44. உராய்வற்ற பரப்பில் ஓய்வில் உள்ள ஒரு பொருளின் மீது செலுத்தப்படும் விசை கீழே தரப்பப்பட்டுள்ளது. இந்த பொருளின் முடுக்கம் என்ன?

8N ← | 10kg | → 20N

(A) 2 $m/s^2$

(B) 0.8 $m/s^2$

(C) 2.8 $m/s^2$

(D) 1.2 $m/s^2$

45. சூரியனைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அமைப்பால் (ISRO) ஏவப்பட்ட விண்கலம் எது?

(A) சந்திரயான் - III

(B) ரிசாட் (RISAT)

(C) ஆதித்யா - L1

(D) மங்கல்யான்

46. சமீபத்தில் செய்திகளில் காணப்பட்ட "ஸ்னோப்ளைண்ட்" என்றால் என்ன?

(A) சிறுகோள்

(B) பாலூட்டி

(C) விண்கல்

(D) தீங்குநிரல் (Malware)

47. ஒரு அணு, அதன் M ஷெல்லில் 6 எலெக்ட்ரான்களை கொண்டிருந்தால், அந்த அணுவின் அணு எண் என்ன?

(A) 6

(B) 8

(C) 16

(D) 10

48. $300^{\circ}C$ வெப்பநிலையில் ஒரு குறிப்பிட்ட வாயு நிறையின் அழுத்தம் 1.3 atm. தற்போதைய கன அளவு 10L. வெப்பநிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் இந்த வாயுவின் கன அளவு 2.6L ஆகக் குறைக்கப்பட்டால், தற்போதைய அழுத்தம் என்னவாக இருக்கும்?

(A) 10 atm

(B) 5 atm

(C) 2.6 atm

(D) 1.3 atm

49. இரும்புத் தாது மேக்னடைட்-யை அதன் அசுத்தமான $SnO_2$ யிலிருந்து பிரிக்க எந்த முறையைப் பயன்படுத்தலாம்?

(A) காந்தப் பிரிப்பு

(B) வேதிமுறை கழுவுதல்

(C) நுரை மிதப்பு முறை

(D) கழுவுதல்

50. கேரளாவின் கடலோரப் பகுதியின் கருமணலில் காணப்படும் மற்றும் தொழில்துறை ரீதியாகப் பயன்படுத்தப்படும் ஒரு கனிமம் எது?

(A) இல்மினைட்

(B) ஆக்ஸிஜன்

(C) நைட்ரஜன்

(D) கார்பன்

51. பின்வரும் சேர்மங்களில் எது, தண்ணீருடன் கலக்கும்போது, எரியக்கூடிய வாயுவை உருவாக்குகிறது?

(A) கால்சியம் ஹைட்ராக்சைடு ($Ca(OH)_2$)

(B) கால்சியம் கார்பனேட் ($CaCO_3$)

(C) கால்சியம் கார்பைடு ($CaC_2$)

(D) கால்சியம் நைட்ரேட் ($CaNO_3$)

52. கேரளா லலிதா கலா அகாடமியின் தற்போதைய தலைவர் யார்?

(A) கே. சச்சிதானந்தன்

(B) முரளி சீரோத்

(C) நேமம் புஷ்பராஜ்

(D) கரிவெள்ளூர் முரளி

53. 2024 பாரா ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் F41 பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய விளையாட்டு நட்சத்திர வீரர் யார்?

(A) நவதீப் சிங்

(B) நிதேஷ் குமார்

(C) ஹர்விந்தர் சிங்

(D) பிரவீன் குமார்

54. ஞானபீட விருது வென்ற மலையாளிகள் மற்றும் ஆண்டு. பின்வருவனவற்றிலிருந்து சரியான ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும்:

(A) எஸ். கே. பொட்டேக்காட் - 1982

(B) தகழி சிவசங்கரப் பிள்ளை - 1984

(C) ஓ. என். வி. குருப் - 2009

(D) எம். டி. வாசுதேவன் நாயர் - 1998

55. பின்வரும் கூற்றுகளிலிருந்து தவறான ஜோடியைத் தேர்ந்தெடுக்கவும்:

i) குமாரகுருதேவன் - பிரத்யக்ஷரக்ஷ தெய்வசபா

ii) வைகுண்ட சுவாமிகள் - ஆத்மவித்யா சங்கம்

iii) பண்டிட் கே. பி. கருப்பன் - ஆரியசமாஜம்

iv) அய்யன்காளி - சமத்துவசமாஜம்

(A) i மட்டும்

(B) ii மற்றும் iv

(C) ii மற்றும் iii

(D) i மற்றும் iii

56. முதல் மலையாள செய்தித்தாளான "ராஜ்யசமாச்சாரம்" எங்கிருந்து வெளியானது?

(A) வக்கம்

(B) இல்லிக்குன்னு

(C) செறுதுருத்தி

(D) கோழிக்கோடு

57. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடியாக, "ஆபரேஷன் சிந்தூர்" என்ற பெயரில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களுக்கு எதிராக இந்தியா நடத்திய தடுப்புத் தாக்குதல் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்ற நியமிக்கப்பட்ட இரண்டு பெண் ராணுவ அதிகாரிகள் யார்?

i) சோபியா குரேஷி

ii) ஹிமான்ஷி நர்வால்

iii) வியோமிகா சிங்

iv) அஷான்யா திரிவேதி

(A) i மற்றும் ii

(B) ii மற்றும் iv

(C) i மற்றும் iii

(D) iii மற்றும் iv

58. 2025 இல் கேரள மகளிர் ஆணையத்தின் தலைவர் யார்?

(A) வழக்கறிஞர் குன்ஹைஹஷா

(B) பி. சதிதேவி

(C) ஏ. கே. பிரேமஜம்

(D) வி. ஆர். மகிளாமணி

59. மின்-ஆளுமை (e-goverance) என்றால் என்ன?

(A) அரசின் சமூக ஊடக பரப்புரை திட்டங்களை நடத்துதல்

(B) அரசு அலுவலகங்களில் இணையப் பயன்பாட்டைக் நெறிப்படுத்துதல்

(C) ஆன்லைன் சேவைகளைப் பயன்படுத்தி ஒரு தனியார் நிறுவனத்தை நடத்துதல்

(D) அரசு சேவைகளை வழங்க மின்னணு வழிமுறைகளைப் பயன்படுத்துதல்

60. பின்வருவனவற்றில் கணினி தொடர்பான எந்த சாதனம் வன் நகல் வெளியீட்டை வழங்க முடியும்?

(A) மானிட்டர்

(B) பிரிண்டர்

(C) ஸ்பீக்கர்

(D) கீபோர்டு

61. பின்வருவனவற்றில் LAN-ன் பொருள் வரையறை எது?

(A) உலகெங்கிலும் உள்ள கணினிகளை இணைக்கும் செயல்முறை

(B) ஒரு சிறிய புவியியல் பகுதிக்குள் (எ.கா., ஒரு கட்டிடம் அல்லது வளாகம்) கணினிகளை இணைக்கும் செயல்முறை

(C) பல்வேறு நாடுகளில் உள்ள கணினிகளை இணைக்கும் செயல்முறை

(D) செயற்கைக்கோள் இணைப்புகள் வழியாக மட்டுமே கணினிகளை இணைக்கும் செயல்முறை

62. செயற்கை நரம்பியல் வலைப்பின்னல்களைப் பயன்படுத்தி இயந்திரங்களை ஏதுவாக்கும் அடிப்படைக் கண்டுபிடிப்புகள் மற்றும் புது புனைவுகளுக்காக 2024 ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற விஞ்ஞானிகள் யார்?

(A) டேவிட் பேக்கர், டெமிஸ் ஹசாபிஸ், ஜான் ஜம்பர்

(B) விக்டர் ஆம்ப்ரோஸ், கேரி ரூவ்குன்

(C) ஜான் ஜே. ஹாப்ஃபீல்ட், ஜெஃப்ரி ஹிண்டன்

(D) சைமன் ஜான்சன், ஜேம்ஸ் ஏ. ராபின்சன்

63. பின்வருவனவற்றில் குவாண்டம் கம்ப்யூட்டிங் அடிப்படையில் கூகுள்-ஆல் உருவாக்கப்பட்ட செயலி சிப் (சில்லு) எது?

(A) வில்லோ

(B) ஜி. பி. டி. 4. ஓ

(C) க்ரோக் 3

(D) மஜோரானா 1

64. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 திருத்தத்தின் வழியாக புதிதாக உருவாக்கப்பட்ட அமைப்பு பின்வருவனவற்றில் எது?

(A) நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம்

(B) நுகர்வோர் குழு

(C) நுகர்வோர் ஆணையம்

(D) இவை எதுவும் இல்லை

65. போக்சோ சட்டத்தின் எந்தப் பிரிவு தவறான புகார் அல்லது தகவல் கொடுத்தலுக்கான தண்டனை பற்றி கூறுகிறது?

(A) பிரிவு 22

(B) பிரிவு 17

(C) பிரிவு 20

(D) பிரிவு 24

66. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை இயற்றிய முதல் நாடு எது?

(A) இந்தியா

(B) சீனா

(C) ஸ்வீடன்

(D) அமெரிக்கா

67. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பாதுகாப்புக்கான சட்டமான MWP சட்டத்தின் எந்த அத்தியாயம் முதியோர் இல்லங்கள் பற்றிக் கூறுகிறது?

(A) அத்தியாயம் 3

(B) அத்தியாயம் 2

(C) அத்தியாயம் 7

(D) அத்தியாயம் 5

68. 2025 கபடி உலகக் கோப்பை போட்டி நடைபெற்ற நாடு எது?

(A) சீனா

(B) இங்கிலாந்து

(C) அயர்லாந்து

(D) ஜப்பான்

69. 2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச புக்கர் பரிசை வென்ற கன்னட எழுத்தாளர் யார்?

(A) ஷாஜஹான் கருணா திலக்

(B) டாமன் கல்கர்ட்

(C) டக்ளஸ் ஸ்டூவர்ட்

(D) பானோ முஷ்டாக்

70. குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் குடும்ப நிகழ்வு அறிக்கையைத் தயாரிக்க வேண்டியவர் யார்?

1. காவல் அதிகாரி

2. சேவை வழங்குநர்

3. குற்றவியல் நடுவர்

4. பாதுகாப்பு அதிகாரி

(A) 1 & 3

(B) 2 & 3

(C) 3 & 4

(D) மேலே உள்ள அனைவரும்

71. மூன்று மணிகள் முறையே 10, 15, மற்றும் 24 நிமிட இடைவெளியில் ஒலிக்கின்றன. காலை 8 மணிக்கு, மூன்று மணிகளும் ஒன்றாக ஒலிக்கத் தொடங்குகின்றன. அவை மீண்டும் எப்போது ஒரே நேரத்தில் ஒன்றாக ஒலிக்கும்?

(A) 8 : 49 am

(B) 9 : 25 am

(C) 10 : 45 am

(D) 10 : 00 am

72. $\frac{0.003 \times 0.45}{0.009} =$ ________

(A) 0.015

(B) 0.15

(C) 1.5

(D) 15

73. 108 கி.மீ/மணி என்பது ________ க்கு சமம்.

(A) 35 மீ/வி

(B) 30 மீ/வி

(C) 45 மீ/வி

(D) 60 மீ/வி

74. 16 ஆண்கள் ஒரு வேலையை 30 நாட்களில் செய்து முடிப்பார்கள். அதே வேலையை 24 ஆண்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்?

(A) 22 நாட்கள்

(B) 20 நாட்கள்

(C) 25 நாட்கள்

(D) 15 நாட்கள்

75. 24 செ.மீ உயரமும், 6 செ.மீ அடி ஆரமும் கொண்ட ஒரு கூம்பு உருக்கப்பட்டு ஒரு கோளமாக மாற்றப்பட்டால், அந்த கோளத்தின் ஆரம் என்னவாக இருக்கும்?

(A) 6 செ.மீ

(B) 8 செ.மீ

(C) 3 செ.மீ

(D) இவை எதுவும் இல்லை

76. வித்தியாசமானதைக் கண்டுபிடிக்கவும்

(A) 24

(B) 72

(C) 36

(D) 168

77. 0, 6, 24, 60, ________

(A) 85

(B) 100

(C) 135

(D) 120

78. WFB, TGD, QHG, __________

(A) NIJ
(B) NIK
(C) NJK
(D) OIK

79. 06/09/2022 முதல் எட்டு மாதங்கள் மற்றும் ஏழு நாட்கள் முடிந்ததும் தேதி என்னவாக இருக்கும்?

(A) 12/04/2022
(B) 12/05/2022
(C) 12/05/2023
(D) 11/05/2023

80. E = 5 PEN = 35 எனில் PAGE = __________ ?

(A) 36
(B) 32
(C) 28
(D) 29

**81. Choose the suitable collective noun to complete the phrase given below:**

**A _______ of stairs.**

**(A) flight**
**(B) suite**
**(C) fleet**
**(D) pack**

**82. Add the right question tag to the following statement to make it a question.**

**She seldom goes out, _______?**

**(A) does she?**
**(B) don't she?**
**(C) doesn't she?**
**(D) did she?**

**83. Fill up with the correct preposition:**

**Rohan is interested _______ learning new languages.**

**(A) to**
**(B) in**
**(C) with**
**(D) for**

**84.** **Change the following sentence from active to passive form. Choose your answer from the given options:**

**My cousin has drawn this picture.**

**(A) This picture is drawn by my cousin**

**(B) This picture was drawn by my cousin**

**(C) This picture has been drawn by my cousin**

**(D) This picture had been drawn by my cousin**

**85.** **Fill up suitably:**

**'Wide' means the same as _______.**

**(A) long** **(B) narrow**

**(C) high** **(D) broad**

**86.** **Replace the underlined word in the following sentence with the suitable phrasal verb:**

**We will <u>cancel</u> the trip if the weather is bad.**

**(A) call off** **(B) call on**

**(C) go off** **(D) go on**

**87.** **Choose the correctly spelt word from the following:**

**(A) arguement** **(B) argeument**

**(C) argument** **(D) argumant**

**88.** **Change the following sentence into reported speech:**

**"How do you feel this morning?", he asked me.**

**(A) He asked me how I felt this morning**

**(B) He asked me how I feel that morning**

**(C) He asked me how I felt that morning**

**(D) He asked me how I had felt that morning**

**89.** **Fill up with the correct tense form of the verb given in bracket:**

**When her mother arrived, Isha ______ (finish) the laundry.**

**(A) finished** **(B) has finished**

**(C) will finish** **(D) had finished**

**90. Complete the following sentence suitably:**

**Unless you study well, _______.**

**(A) you will pass**

**(B) you will not pass**

**(C) you could pass**

**(D) you could have passed**

91. வேந்தன், அரசன், கொற்றவன் போன்ற சொற்களுக்கு இணையான சொல்லை தேர்ந்தெடுத்து எழுதவும்.

(A) மன்னன்

(B) முதல்வன்

(C) பிரதமர்

(D) அதிகாரி

92. சரியான வாக்கியத்தைத் தேர்வு செய்க.

(A) நிலத்தை உழுது உழவன்; விதைத்து நீர்பாய்ச்சிக் கொண்டு உரமிட்டான் அறுவடை செய்தான்.

(B) உழவன் நிலத்தை உழுதுகொண்டு நீர்பாய்ச்சி அறுவடையும் உரமும் இட்டான்.

(C) உழவன் நிலத்தை உழுது விதைவிதைத்து, நீர்பாய்ச்சி, உரமிட்டு அறுவடை செய்தான்.

(D) உழவர்கள் நிலம் உழுது நீரும் விதையும் விதைத்து உரம் பாய்ச்சிக் கொண்டு அறுவடை செய்தார்கள்.

93. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லை மொழி பெயர்க்கவும்.

"My Father takes coffee in the morning"

(A) என் அப்பா காபியை காலையில் எடுத்து வருகிறார்.

(B) என் தந்தை காலைப் காப்பி குடிப்பார்.

(C) என் அப்பா காலையில் காப்பியை எடுத்து குடிப்பார்.

(D) என் தந்தை காலையில் காப்பி குடிக்கிறார்.

94. பாடலில் வரும் தனிச்சொல்லை தேர்வு செய்க.

'வேடிக்கை மனிதரைப் போலே–நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ'?

(A) வீழ்வே

(B) னென்று

(C) நான்

(D) தாயோ?

95. கீழே தரப்பட்டுள்ள சொற்களில் 'சொந்தம்' என்ற சொல்லுக்குப் பயன்படுத்தும் சரியான சொல் எது?

(A) உரிமை

(B) பந்தம்

(C) சொத்து

(D) குடும்பம்

96. 'பாலை' என்ற சொல்லின் எதிர்ச் சொல் தருக.

(A) மாலை

(B) காலை

(C) சோலை

(D) செழிப்பு

97. சேர்த்தெழுதவும்.

அ + நாடு

(A) அந்தநாடு

(B) ஆநாடு

(C) அநாடு

(D) அந்நாடு

98. பெண்பாற் சொல்லைத் தருக.

(A) இவர்கள்

(B) இவள்

(C) இவைகள்

(D) இது

99. பிரித்தெழுதுக.

'வீரவேல்' இச்சொல்லைப் பிரித்தெழுதவும்.

(A) வீர + வேல்

(B) வீர் + ர + வேல்

(C) வீரம் + வேல்

(D) வீறு + அ + வேல்

100. சரியான மரபுத்தொடரை தேர்வுசெய்யவும்.

(A) திருடியதற்காக காவலர்களிடம் சிக்கிக் கொண்ட அந்தப் பெண் தப்பிக்கக் கருதி முதலைக் கண்ணீர் வடித்தாள்.

(B) காவலர்களிடம் சிக்கி அந்தபெண் முதலைக் கண்ணீர் வடித்தாள்.

(C) முதலைக் கண்ணீர் வடித்த அந்தப் பெண் சிக்கிக் கொண்டாள்.

(D) காவலர்களிடம் திருடியதற்காக சிக்கிக் கொண்ட அந்தப் பெண் முதலைக் கண்ணீர் வடித்தாள்.

## SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK